# IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF SULUR

## (DEPOSITION OF WITNESS

**நீ.ம.சா.1-)**

அசல் வழக்கு எண். 195/2017

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கார்த்திகா | தாலூக்கா | கோவை வடக்கு |
| தந்தை பெயர் | மணி | கிராமம் | துடியலூர் |
| பணி | நீதிமன்ற ஆணையர் / வழக்கறிஞர் | மதம் | |

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 22.08.2025 is accordance with the provision of Act X of 3331

**முதல் விசாரணை**

1. எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்தது. நான் இந்த வழக்கில் இடைநிலை மனு எண்.57/2017 ல் நீதிமன்ற ஆணையராவேன். 21.07.2017 தேதியில் காலை 10 மணியளவில் சர்வேயருடன் வழக்கு சொத்திற்கு சென்றேன். இருதரப்பினருக்கும் அறிவிப்பு கொடுத்துவிட்டு சென்றேன். வாதி வழக்கறிஞர், 1ம் பிரதிவாதி மற்றும் அவரது வழக்கறிஞர் ஆஜராகினர். க.ச.எண்.423/2 காலையில் 40 சென்ட் விஸ்தீரணமுள்ள பூமியை நில அளவையர் உதவியுடன் அளந்தேன். சர்வேயர் கொடுத்த வரைபடத்தில் 37 ½ சென்ட் ஆக்கிரமிப்பு பகுதியில் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார். மேற்படி ஆக்கிரமிப்பு பகுதி சிகப்பு நிற வண்ணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி ஆக்கிரமிப்பு பகுதியில் தென்னை மரங்கள் இருந்தது. **நீதிமன்ற ஆணையர் அறிக்கை நீ.ம.சா.ஆ.1 மற்றும் சர்வேயர் வரைபடம் நீ.ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**வாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1. சர்வே எண்.423/2 காலையில் காணப்பட்ட ஆக்கிரமிப்பில் உள்ள இடத்தில் காணப்படும் தென்னை மரங்களும் வாதியின் சுவாதீனத்தில் உள்ள பூமியில் காணப்படும் தென்னை மரங்களும் ஒரே அளவில் தான் உள்ளது என்றால் சரிதான்.

**<u>1 மற்றும் 5 பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1. என்னிடம் காட்டப்படும் சர்வேயர் வரைபடத்தில் கணினி புலப்படத்தின் மீது தாவா சொத்து வரைந்து காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. மனுதாரர் சொத்துக்கும், எதிர்மனுதாரர் சொத்துக்கும் இடையே தென்வடலாக ஒரு பள்ளம் ஒன்று உள்ளதாக கண்டுள்ளது என்றால் சரிதான். பள்ளம் என்பது நிலவியல் ஓடை என்றால் அப்போது தண்ணீர் செல்லவில்லை, எனக்கு தெரியாது. சிவப்பு நிறத்தில் குறியீடு செய்யப்பட்ட இடத்திற்கு கிழபுறமாகவும், தென்புறமாகவும், வடபுறமாகவும் பிரதிவாதியின் சொத்து உள்ளது என்றால் எனக்கு தெரியாது.

2. தாவா சொத்திற்கு கிழபுறத்தில் ஓடை இருந்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தென்னை மரங்கள் இருந்ததை குறிப்பிட்டுள்ளேன். பிரதிவாதி நிலத்தில் உள்ள தென்னை மரத்தின் வயதும், சிவப்பு நிறத்தில் குறிப்பிட்டுள்ள நிலத்தில் உள்ள தென்னை மரங்களின் வயதும் ஒன்றுதான் என்றால் தெரியாது. பல வருடங்கள் ஆனதால் எனக்கு மறந்துவிட்டது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை குறித்து ஆய்வு செய்ய மட்டும் வாரண்டில் குறிப்பிடப்பட்டிருந்தது. பிரதிவாதியின் சொத்தை குறித்து குறிப்பிடவில்லை.

3. சிவப்பு நிற பகுதிக்கு வடபுறமாக பழைய கட்டிடம் இருந்தது என்றும், அதன் வழியாக தான் சென்றோம் என்றால் இல்லை. சிகப்பு நிறமிட்ட பகுதியை சுற்றி கம்பிவேலி இருந்ததா என்றால் பொளி இருந்தது. பிரதிவாதி சுவாதீனத்தில் இருந்த பகுதியை தான் ஆக்கிரமிப்பு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur